விக்தர் தத்ஸ்கேவிச்

# பச்சைத்



# தீவு

பச்சைத்


தீவு

விக்தர் தத்ஸ்கேவிச்

# பச்சைத் தீவு

வண்ணப் படங்கள்: வி. தத்ஸ்கேவிச்
ஓவியர்: வி. லெவின்ஸோன்
மொழிபெயர்ப்பு : வ. சண்முக சுந்தரம்
திருந்திய வடிவம்: நா. முகம்மது செரீபு, எம். ஏ.

சிறுவன் வாதிக் ஆறு வயதானவன். சோவியத் யூனியனின் தலைநகர் மாஸ்கோவில் வசிக்கிறான். அவன் மிகுந்த ஆர்வ முனைப்பும், துடிதுடிப்பும் மிக்கவன். தனது அப்பாவோ அம் மாவோ நகரத்தைச் சுற்றியோ, வேறு இடங்களுக்கோ நீண்ட பயணம் செல்லும் போது தானும் அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்று ஆசைப்படுபவன். இந்த உலகத்தில் வேறு எதைக் காட்டிலும், மிகவும் சுவைமிக்க ஐஸ்கிரீமைக் காட்டிலும் கூட, இதில் மகிழ்கிறான். அப்போது, அவனது கேள்விகளால் பஸ்களும் களைத்துப் போகும் என்று அப்பா கேலி செய்வார்.



ஒரு நாள் வேலையிலிருந்து வீடு திரும்பிய அப்பா அறிவித்தார்:

''வாதிக், நாளை எனக்கு விடுமுறை. நீயும் நானும் தாவரத் தோட்டத் திற்குச் சென்று அதைச் சுற்றிப் பார்க்கப் போகிறோம். அது மிகவும் ஆர்வமூட்டு வது! அங்கே விந்தையான மரங்கள், பூக் கள், புதர்கள் மற்றும் மயில்கள், தாராக்கள், அன்னங்கள், வாத்துக்கள் போன்ற விதவிதமான எல்லாவகைப் பறவைகளும் உண்டு...''

''அணில்கள் என்னவாயின?'' சிறிது நம்பிக்கையுடன் கேட்டான் வாதிக். உயிருள்ள அணிலைப் பார்க்க அவன் பெரிதும் விரும்பினான்.

''நிச்சயமாக, அவற்றையும் கூட நீ பார்க்கலாம், அவை அநேகமாகச் சாது வானவை. இங்கே பார்...'' உப்பிக் கொண்டிருந்த தனது கோட்டுப் பையை அப்பா ஓரக் கண்ணால் சுட்டிக்காட்டி னார். பையின் உள்ளே உற்றுப்பார்த் தான் வாதிக். அணிலுக்கு விருப்பமான கொட்டைகள் பை முழுக்க நிறைந் திருந்தன.

மாஸ்கோவில் அற்புதமான இயற்கைக் காட்சிகள் நிறைந்த ஓர் இடம் இருக்கிறது. குடியிருக்கும் வீடுகள் எல்லாப் பக்கங்களிலும் சுற்றி நிற்க, நடுவில் இருக்கும் பிரமாண்டமான பச்சைத் தீவு தான் மையத் தாவரத் தோட்டம். ஒரு நடுத்தர நகரம் அமைக்கும் அளவுக்கு அதனுடைய நிலப்பரப்பு உள்ளது. உலகம் முழுதுமிருந்தும் தாவரங்கள் இங்கு சேகரிக்கப்பட்டுள்ளன. வறட்சி மிகுந்த தென் பகுதி சைப்ரஸ் மரங்களும், பால்ம் மரங்களும் (பனை மரம் அவற்றில் ஒரு வகை), தொலைதூர வடக்கு மொஸ், லிச்சின் என்ற தாவரங்களும் (பாசிகளும் மரப்பாசிகளும் போன்றவை) இங்குள்ளன. மாஸ்கோ வட்டாரத்துப் பிர் மரங்களும் தென் அமெரிக்கப் பைன் மரங்களும் இங்கே அருகருகே வளர்கின்றன. வசந்தகாலம் முதல் இலையுதிர் காலக் கடைசி வரை புல்தரைகளும் பூப்பாத்திகளும் ஒளிமிக்க வண்ணங்களில் பளபளக்கும். இயற்கையில் அல்லாது விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட தாவர வகைகளையும் இங்கே காண முடியும்.



இந்தத் தோட்டம் அத்தனை பெரியதாகவும், பார்க்கத்தக்கன ஏராளம் இருப்பதாலும் ஒரே நாளில் அதை முழுதும் பார்த்துவிட முடியாது. பார்வையாளர்களுடைய வசதிக்காக இத்தோட்டத்தின் முக்கியப் பாதைகளின் வழியாகத் தொடராய் இணைந்த பஸ் வண்டிகள் போகின்றன. பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததுமே, சினிமாத் திரையில் ஓடுவது போல, உங்களருகே ஒன்றன் பின் ஒன்றாக இயற்கையின் வண்ணமிகு படங்கள் வந்தபடியிருக்கும்: ஓக் மற்றும் பிர்ச் தோப்புகள், குளங்கள், பெரிய பூங்காக்கள், சைபீரிய பிர் மரங்கள், வெள்ளி பிர் மரங்கள், லார்ச்கள், பழத்தோட்டங்கள், காய்கறித் தோட்டங்கள், சிறுப்பழத் தோட்டங்கள் ஆகியன. பூமியின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கொண்டுவரப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான விதவித வகை மரங்களைக் கொண்ட காட்டால் அவை சுற்றிச் சூழப்பட்டுள்ளன.

அப்பாவுடைய விடுமுறை நாள் அதிருஷ்ட மானதாய் இருந்தது. அதிகாலையிலிருந்தே சூரியன் பிரகாசித்தது. வானம் நீல நிறமாயும் நிர்மலமாயும் இருந்தது. அன்று தெளிவான, கதகதப்பான கோடை நாளாக இருக்கும் என்று தெரிந்தது. காலை உணவைச் சீக் கிரம் உண்டு விட்டு, அம்மாவின் வேடிக்கை யான புத்திமதிகளைக் கேட்டுக் கொண்டு, அப் பாவும் பையனும் மெட்ரோ ரயில் நிலையத் துக்குப் போனார்கள். நாற்பது நிமிடப் பய ணத்திற்குப் பின் தாவரத் தோட்டத்தின் நுழைவாயில் வழியாக நடந்து போய்க்கொண் டிருந்தார்கள்.

நுழைவாயில் அருகே ஒரு பஸ் தொடர் நின்று கொண்டிருந்தது. பயணத்திற்கு பஸ் ஸைக் கிளப்பவிருந்த ஓட்டுநர் புதிய பயணி கள் வருவது கண்டு கையை ஆட்டி விரைந்து வரச் சைகை காட்டினார். அப்பாவும் வாதிக் கும் உட்கார்ந்ததுமே அந்த பஸ் தொடர் புறப்பட்டது. திருப்பங்களிலெல்லாம் உற்சாக மாக ஓட்டுநர் ஒலி எழுப்பிக் கொண்டு சென் றார்.

தோட்டப்பாதையின் இரு பக்கத்திலும் உயரமான, அடர்த்தியான காடு தென் பட்டது.

"அப்பா, இது உண்மையான காடுதானா!" என்று வியப்புடன் கூவினான் வாதிக்.



18

"உண்மையான காடுதான். இதில் பெர்ரிப் பழங்களும் காளான்களும் உள்ளன. பள்ளத்தாக்கு அல்லிகளும் வசந்தத்தில் காட்டின் திறந்த வெளிகளில் மலர்கின்றன. அத்துடன் சிறப்பானது அது. அந்த ஓக் மரங்களைப் பார். மாஸ்கோ நகரைச் சுற்றி சில ஓக் தோப்புகளே எஞ்சி இருக்கின்றன. அவற்றில் ஒன்று இங்கே மையத் தாவரத் தோட்டத்தில் இருக்கிறது. இந்தத் தோப்புக்கு நூறு வயதுக்கு மேலாகி விட்டது. அதில் சில ராட்சச ஓக் மரங்கள் இரு நூறு ஆண்டுகள் ஆனவை. அங்கே அந்தச் சக்திமிக்க அழகைப் பார்!"

''பிர்ச் தோப்புக் கூட இங்கே சிறப்பானது தானா?''

''நிச்சயமாக. டஜன் கணக்கான பிர்ச் மர வகைகள் தோட்டத்தில் உள்ளன. பிர்ச் மரங்கள் எல்லாம் ஒரே மாதிரியாகத் தோன்றுகின்றன அவ்வளவுதான். கூர்ந்து பார்த்தாலே வித்தியாசத்தை அறிய முடியும்.''

''அவை உண்மையில் மிகவும் வித்தியாசமாக இருக்கின்றன,'' வாதிக் ஒத்துக்கொண்டான். ''இந்த பிர்ச் மரங்களின் தண்டுகளெல்லாம் வெள்ளையாய் இருக்கின்றன. பக்கத்திலிருப்பவையோ அநேகமாகக் கருமையாய் இருக்கின்றன.''



பஸ் நின்றது. திடீரென்று காட்டுக்குள்ளிருந்து கீச்சுக் குரல் கேட்டது.

“இதென்ன, அணிலா இப்படிக் கத்துது?” குசுகுசு வென்று கேட்டான் வாதிக்.

“இல்லே, வாதிக். இது மயில். போய்ப் பார்க்க லாம்.”

அவர்கள் பஸ்ஸை விட்டிறங்கி காட்டுக்குள் பறவைக் கூட்டை நோக்கிப் போனார்கள். போகும் போது மீண்டும் ஓர் அசாதாரணமான குரல் அவர் களை வாழ்த்தியது. கூண்டுக்குள் ஒரு பெரிய மயில் பண்ணையே இருந்தது.

"இந்த அழகிய பறவை கள் இந்தியாவிலிருந்து வந் தவை," என்று வாதிக்கின் தந்தை விளக்கினார்.

அழகிய மயில்களையும் அவற்றின் சாதாரணத் தோற்றங் கொண்ட சாம் பல் நிறத் துணைவிகளை யும் கூர்ந்து நோக்கினான் வாதிக்.

''அப்பா, அவை ஏன் வருத்தமாகக் கத்துகின்றன?'' என்று கேட்டான் வாதிக். ஆனால் அப்பாவிடமிருந்து பதிலுக்காகக் காத்திருக்காமல் அவனே தனது சொந்த விளக்கத்தைக் கண்டு பிடித்தான். ''ஒருவேளை அவற்றிற்குத் தாய்நாட்டு ஏக்கம் இருக்கலாம், இல்லையா?''

''அநேகமாக இருக்கலாம். ஆனால் தாய்நாட்டில் கூட அவை இப்படித்தான் கூச்சல் போடுகின்றன. குறிப்பாக அவை பாம் பைப் பிடித்து விடும் போது. பாம்பைக் கண்டு மயில்கள் பயப் படுவதில்லை. அடிக்கடி அவற்றை உணவாகக் கூட கொள் கின்றன.''

மயில்களை நன்றாகப் பார்த்து விட்டு அப்பாவும் பையனும் தோட்டத்தின் நடுவே நடந்தார்கள். தோட்டப்பாதையின் ஒரு வளைவில் அவர்கள் திரும்பியவுடன் வாத்துக்கள், தாராக்கள், பெருமையும் அழகும் கொண்ட அன்னங்கள் நிறைந்த குளங்கள் தொடர்ச்சியாக வந்தன.

வாதிக்கின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவன் ஒளித்து வைத்திருந்த ரொட்டித் துண்டை வெளியே எடுத்துச் சிறுசிறு துணுக்குகளாகத் தண்ணீரில் வீசத் தொடங்கினான்.

தங்கள் நடையைத் தொடரப் பையனை இணங்க வைப்பது அவனது அப்பாவுக்கு மிகுந்த சிரமமாகி விட்டது.

மீண்டும் பஸ்ஸில் அமர்ந்து மேலும் சென்றார்கள்.







பல்வகை மரங்கள் இருந்த தோட்டத்தின் வழியாக பஸ் சென்றது.

பரவலான ஒளி மிகுந்த நிலப்பரப்பில் பிர், லார்ச், மேப்பிள், செஸ்ட்நட் ஆகியவையும் வெவ்வேறு நாடுகளினின்றும் கொண்டுவரப்பட்ட பிற மரங்களும் எழிலாகக் கூட்டம் கூட்டமாய் இருந்தன. வட அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்திருந்த செவ்விந்திய பீன் மரங்கள் குறிப்பாகக் கவர்ச்சிகரமாய் விளங்கின. பழுப்புக் கலந்த வெண்ணிறப் பூக்களால் நிறைந்திருந்த அவை, பிரகாசமான பச்சைப் பின்னணியில் எடுப்பாக நின்றன.

''இவையெல்லாம் பயனுள்ள மரங்களா?'' என்று வாதிக் விசாரித்தான்.

''பெரிதும் பயனுள்ளவை. இவற்றில் சில வகை மரங்கள் மருந்துகள், காகிதம் மற்றும் பிற மதிப்புமிக்க பொருள்கள் தயாரிப்பதற்கான மூலப் பொருள்களாகப் பயன்படுகின்றன. மற்ற வகை மரங்கள் தோட்ட அலங்காரத்திற்காக உபயோகமாகின்றன. தாவரங்களில் உள்ள பிற பயனுள்ள தன்மைகளை விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்டுபிடித்து வருகிறார்கள்.''

ஆர்வத்துடன் சுற்றிலும் பார்த் தான் வாதிக். 'ஐஸ்கிரீம்' என்று எழுதப்பட்ட தள்ளு வண்டி ஒன்று திடீரென்று அவனது கண்களில் பட்டது. பஸ்ஸின் இறங்கும் வழி யை நோக்கி ஒரு தீர்மானத்துடன் நடந்து சென்றான். அந்தக் கணத் தில் பஸ் நிற்க வாதிக் பாதையின் மீது குதித்தான். குழப்பமுற்ற அப்பா வும் தொடர்ந்து இறங்கினார். பை யனை உற்றுப்பார்த்தார். அவன் கண்களில் தெரிந்த மௌனமான வேண்டுகோளிலிருந்து எல்லாவற்றை யும் ஊகித்துக்கொண்டார் அவர்.

''கொஞ்சம் தெம்பூட்டிக் கொள்ள இதுதான் நேரம் என்று நீ சொல்ல முயல்கிறாயா? சரி, இப்போது ஐஸ் கிரீம் அதற்கு ஏற்றதுதான்.''

ஐஸ்கிரீம் வாங்கிக் கொண்டு அப்பாவும் பையனும் பாதை வழியே மெதுவாக நடந்தார்கள்.

'எப்போதும் பூ மலர்கிற தோட்டம்' எனப்படும் தோட்டத்தின் வழியாக அவர்கள் நடந்தார்கள். அங்கு பூ மலர்கிற புதர்களும் நீண்ட காலம் வாழும் புற்களும் வெவ்வேறு பூச்செடிகளும் ஒன்றுடன் ஒன்று கலந்து நின்றன. வசந்தகாலத் தொடக்கம் முதல் இலையுதிர் காலக் கடைசி வரை தோட்டத்தின் இந்த மூலையில் தாவரங்கள் ஒன்றைத் தொடர்ந்து ஒன்று மலர்ந்து, பிரகாசமானதும் வண்ணமயமானதுமான தோற்றத்தை ஏற்படுத்தும்.

ஆனால் ஓர் ஆளை விட உயரமாகவும் வளர்ந்திருந்த ராட்சச கவ்-பார்ஸ்னிப் செடியால் (பசுத்தீவனச் செடி போன்றது) வாதிக் மிகவும் அதிசயித்துப் போனான். அதனது பெரிய இலைகளும், தொப்பி போலக் கொத்துக் கொத்தாகத் தொங்கிய பூக்களும் வாதிக்கையும் அவன் அப்பாவையும் மழைக் காற்றில் பாதுகாப்புத் தரப் போதுமானதாக இருந்தன. ஆனால் இப்புல்லைத் தொடாமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அது காஞ்சொறிச் செடியைப் போல எரிச்சல் தரும்.

''ஆனால், அணில்கள் எங்கே? ஏன் இவ்வளவு நேரமாக அவற்றை நாம் காண முடியவில்லை? தோட்டத்திலிருந்து அவை வேறு எங்காவது ஓடிப் போயினவா? அப்பா, அணிலை நாம் பார்ப்போமா?'' என்று சிறுவன் திடீரென்று தன் தந்தையைக் கேட்டான்.

''நாம் அணில்களைக் கட்டாயம் பார்ப்போம்!''



அணில்கள் குறித்துச் சுறுசுறுப்பாகப் பேசிக் கொண்டும், அவற்றைத் தேடிக் கொண்டும் அவர்கள் சென்ற வேளையில், பயிர்த் தாவரங்களின் கண்காட்சிக்குத் திடீரென்று வந்து சேர்ந்தனர். பார்க்க வேண்டிய ஆர்வமூட்டும் விஷயங்கள் இங்கும் நிறைய இருந்தன. மெக்ஸிகோ நாட்டுக் காட்டுத் தக்காளிப் பழங்களைக் கண்டான் வாதிக். அவை பட்டாணிக் கடலை அளவே இருந்தன. செயற்கைத் தேர்வு மூலம் மனிதன் எப்படி இந்தக் காட்டுப் பழத்திலிருந்து இன்றைய சாறு நிறைந்த பெரிய தக்காளிப் பழத்தை மெல்ல மெல்லப் பயிர் செய்தான் என்பதை அவன் அறிந்து கொண்டான்.

மனிதனால் உண்டாக்கப்பட்ட இன்றைய முட்டைக்கோஸ் வகைகளின் மூதாதையான காட்டு முட்டைக்கோசையும் முதல் முறையாக வாதிக் அங்கு கண்டான். அம்மா வலியுறுத்தி அவனைத் தின்னச் சொல்கிற சாதாரண முட்டைக்கோஸ் இத்தனை வேறுபாடாக இருக்கக் கூடும் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. சில முட்டைக்கோஸ் வகைகளை வெறுமனே பார்த்து அவை என்ன தாவரங்கள் என்று ஊகிக்க முடியாததாக இருந்தன. அங்கிருந்த ஒரு முகவரிச்சீட்டின் மூலம் தான் இந்தப் புதிரான பச்சைப் பந்து அல்லது விந்தையான கடற்பஞ்சு, முட்டைக்கோசே என்றும், ஒரே இனத்திலிருந்துதான் இவை வந்தன என்றும் ஒருவரால் கூற முடிந்தது.

"அப்பா, இந்த விசித்திரமான மரம் என்ன? அதன் உச்சியில் ஏன் வளையம் கட்டியிருக்கிறார்கள்?"

"இது ஆப்பிள் மரம். இவை விஞ்ஞானிகளுடைய ஆராய்ச்சித் தோட்டங்கள். கிளைகள் எந்த மாதிரி அமைந்திருந்தால் மரம் அதிகப் பழம் கொடுக்கும், நீண்ட காலம் உயிர் வாழும், நோய் பற்றாமல் இருக்கும் என்று ஆராய்ச்சி செய்கிறார்கள். எந்திரங்களின் துணையுடன் அறுவடை செய்வதற்கு எது வசதியாய் இருக்கும் என்றும் பார்க்கிறார்கள்... ஓர் இசைக் கருவியைப் போல், ஒருவித யாழ் போல, இந்த மரம் வடிவம் பெற்றிருப்பதைப் பார்."





''இப்போது வெப்பத் தோட்டத்துக்குப் போய் விசித்திரமான அந்நியநாட்டுத் தாவரங்களைப் பார்ப்போம்,'' என்று அப்பா ஆலோசனை சொன்னார்.

அந்தத் தோட்டத்தில் வெப்பமாகவும் புழுக்கமாகவும் இருந்தது. பிரமாண்டமான கண்ணாடிச் சுவர்களின் வழியாகவும் கூரையின் வழியாகவும் வெப்பப்படுத்தப்பட்ட காற்றில் ஆவி நிறைந்திருந்தது. வெப்ப மண்டல நாடுகளில் வளரும் மிகவும் நளினமான தாவரங்களைப் பற்றி ஓர் அழகான பெண் ஒருத்தி எடுத்துச் சொன்னாள். இவை மிதவெப்ப நாடுகளில் வெப்பத் தோட்டங்களில் மட்டுமே உயிர்பிழைக்க முடியும்.

அநேகமாகக் கண்ணாடிக் கூரையைத் தொட்டுக் கொண்டு நின்றது ஒரு தென்னை மரம். அண்ணாந்து பார்த்தபடி நின்றான் வாதிக்.

''இது ஓர் ஆணினுடைய மரம்!'' என்று மரியாதையுடன் சொன்னான் வாதிக். ''தேங்காய் பறிப்பதற்கு இதன் மீது ஆண்கள் மட்டும்தான் ஏறி குலுக்குவார்கள். அவர்கள் அப்படிச் செய்வதை நான் தொலைக்காட்சியில் கண்டேன்.''

பிறகு 'வாழை மரம்' என்ற சொல்லை வாதிக் பிடித்துக் கொண்டான். திரும்பிப் பார்த்த அவன் பிரமாண்டமான தாவரம் ஒன்றைக் கண்டான். அது ஒரு ராட்சசப் புல்தான் என்பதையும், அதனது வாழ்க்கையில் இனிப்பு மிகுந்த வாழைப் பழங்கள் நிரம்பிய குலை ஒன்றின் மூலம் ஒரேயொரு முறைதான் அது கனி கொடுக்கும் என்பதையும் அறியப் பெரிதும் வியப்புற்றான்.

வாழை மரத்திற்கு அருகில் இன்னொரு அதிசயம் இருந்தது. அதுதான் கோக்கோ மரம். பூக்களும் காய்களும் இதன் அடி மரத்திலேயே உண்டாகின்றன.

''இது ஓர் அற்புதம்!'' என்று வியப்பில் கத்தினான் வாதிக்.

ஆனால் சாதாரணமாக வீடுகளில் வளர்க்கப்படக் கூடிய ஃபிக் மரமும் சரியாக கோக்கோ மரத்தைப் போலவே பூக்கவும் கனி கொடுக்கவும் செய்கிறது என்பது தெரிய வந்தது.

வியப்படைந்த வாதிக் நிறையப் பார்ப்பதற்கு முன்னாலே விசித்திரமான மற்ற தாவரங்கள் சில குறித்துப் பேச அப்பெண் தொடங்கினாள்: அவை போம்கிரேனித், காக்டஸ் (இந்தியாவில் அத்தாவரங்கள் குட்டை மாதுளை மற்றும் கற்றாழைச் செடி என அழைக்கப்படும்), ஆரவுக்காரிய மற்றும் பாக்ஸ் மரம். இந்தச் சிற்றுருவாக்கப்பட்ட தாவரங்களுக்கு ஏற்கெனவே ஏறக் குறைய நூறு வயது ஆகிறது. அவை மிகவும் மெதுவாக வளர் கின்றன. ஆனால் மிக அதிகக் காலம் வாழ்கின்றன.

அடுத்த வெப்பத் தோட்டம் ஆர்கிட் பூச்செடிகளால் நிறைந்திருந்தது. வியப்புக்குரிய விதவிதமான வடிவங்களிலும் வர்ணங்களிலும் அயற்பண்பான இப்பூக்கள் மலர்ந்திருந்தன. நானூறுக்கு மேற்பட்ட வகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வெப்ப மண்டலக் காடுகள்தான் ஆர்கிட்களின் தாய்நாடு ஆகும். ஆனாலும், மாஸ்கோவில் அவை நன்றாக வளர்கின்றன. ஆண்டு முழுதும் பூக்கும் இவை குறிப்பாகக் குளிர் காலத்தில் எடுப்பாகக் காணப்படுகின்றன.

வாதிக் இப்பூக்களைச் சந்தேகத்துடன் பார்த்தான். கேக்குப் போல மணத்த அவை அளவுக்கு மீறி அழகாய் இருந்ததால், உண்மையான பூக்கள் அல்லவோ என்று தோன்றியது. எவரும் பார்க்காத போது ஓர் இதழைத் தொட்டுப் பார்த்து, பூத்தொட்டியில் உற்றுப் பார்த்தான். அங்கு மண் எதுவும் இல்லை என்பது தெரிந்தது. காய்ந்து போன பெரணி வேர்களின் மீது ஆர்கிட்கள் வளர்கின்றன.

நடுவில் அழகுபடுத்தப்பட்ட ஒரு குளத்துடன் இருந்த சிறு வெப்ப அறையில் பூச்சிகளைத் தின்னுகிற தாவரம் ஒன்றினை வாதிக் முதன்முதலாகப் பார்த்தான். அருஞ்சுவையுடைய சிறு கொம்பு வடிவக் கூடைகள் தாவரத்தினுடைய கிளைகளினின்றும் தொங்கின. ஆர்வத்தோடு உள்ளே எட்டிப்பார்க்கின்ற எந்தப் பூச்சியும் உடனடியாகக் கண்ணிக்குள்ளாக விழுகிறது. ஒட்டிக்கொள்ளும் பசையினால் மேற்பூச்சுப் பூசப்பட்ட கூடையின் உள்புறச் சுவர்களுக்குள்ளாகப் பூச்சி ஒட்டிக்கொண்டு விடுகிறது. கூடை சடக்கென மூடிக்கொள்ள, தாவரம் தனது உணவை மெல்ல ஜீரணிக்கிறது.

தொட்டாற் சுருங்கி என்ற அதிசய வகைத் தாவரமும் குளத்தின் ஓரத்தில் இருந்தது. இலேசாகத் தொட்டதுமே அதனது இலைகள் உடனடியாகச் சுருங்கிக் கொள்கின்றன.





தொட்டாற் சுருங்கிக்குப் பக்கத்தில் வாதிக் சுணங்கி விட்டான். தொடப்பட்ட போது, அந்தச் சிறிய இலைகள் உயிர் பெற்று எழுவதைக் கவனிக்க அவன் உண்மையாகவே மகிழ்ந்தான். அடுத்த வெப்பத் தோட்டத்துக்குப் போய்விட்ட வழி காட்டியை அவன் எட்டிப்பிடித்தபோது, அப்பெண் புகழ்பெற்ற விக்டோரியாச் செடி பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

எழுபது கிலோ வரைத் தாங்கக் கூடிய இந்த அல்லியின் பரந்த இலைகள் குளம் பூராவும் நிறைந்திருந்தன. விக்டோரியாவினுடைய மலர் நம்புதற்கரிய அழகு வாய்ந்தது. சில வேளைகளில் நாற்பது சென்டிமீட்டர் விட்டம் உள்ள அதனது பெரிய பூ, ஒரு மாதக் காலத்தில் படிப்படியாக வெண்பனி நிறத்திலிருந்து இளஞ்சிவப்பு நிறமாக மாறுகிறது. மாஸ்கோவில் விக்டோரியா மிகவும் வெப்பமான ஆண்டுகளில் தான் பூக்கும்.

வியப்பால் வாயடைத்துப் போய் நின்ற வாதிக் ராட்சச அல்லியின் இலைகளைத் தன் செயலற்ற நிலையில் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இலை என்றால் இதுதான் இலை!'' பெரும் மகிழ்ச்சியுடன் கிசுகிசுத்தான் பையன். ''உண்மையான ஒரு சின்னக் கட்டுமரம் போலல்லவா இருக்கிறது. இதன் மீது உட்கார்ந்து மிதக்கக்கூட முடியும், ஆனால் இது நம் இரண்டு பேரையும் தாங்குமா, அப்பா?''

அவனுடைய அப்பா முறுவலித்தார்.

''நம் இரண்டு பேரையும் அது தாங்க முடியாது என்று பயப்படுகிறேன். ஆனால் நீ ஒருவன் மட்டும் அதில் சவாரி செய்யலாம்.''

திருப்தியடைந்த வாதிக்கும் அப்பாவும் வெப்பத் தோட்டத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

''அப்பா, புல் மீது அங்கே கிடக்கும் அந்த விரிப்பு என்ன?''



''என்ன விரிப்பு?'' அவனுடைய அப்பா புரிந்து கொள்ளாது பையன் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்த திசையில் பார்த்தார். ''இது விரிப்பு இல்லை, பூக்கள். பக்கத்திலே போய் நாம் பார்க்கலாம். பியோனிக்கள் இப்போது மலரத் தொடங்கி இருக்கின்றன. அவை மிகவும் அழகான பூக்கள். புல் மீது உள்ள அந்தக் குட்டைப் பூக்களைப் பார். அவற்றை நீ விரிப்பு எனத் தவறாகக் கருதிவிட்டாய். தூரத்திலிருந்து பார்த்தால் அவை அப்படித்தான் தோன்றுகின்றன. இந்தப் புல் தரையில் இன்னும் ஒரு மாதத்தில் கிலாதியோலைச் செடிகள் பூக்கும். அவற்றின் பச்சைத் தண்டுகளைப் பார்.

கிலாதியோலைகளின் பல்வேறு வகைகள் எத்தனை நிறங்களில் பூப்பூக்கும் என்பதை இப்போது கற்பனை செய்வது கஷ்டமானது. மலர்ச்செடி வளர்ப்பு விஞ்ஞானிகள் பலர் கிலாதியோலைகளின் புதிய வகைகளை உற்பத்தி செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.''



"இவை கசகசாச் செடிகள், இல்லையா!" என்று வாதிக் மகிழ்ச்சியுடன் சொன்னான்.

காட்டு வெளியில் நுண்மையான தண்டுகளில் நின்ற பிரகாசமான சிவப்புக் கசகசாப் பூக்கள் இளந்தென்றலின் அசைவுக்கேற்பத் தலைகளை அலைத்தன.

"கசகசாவின் பாட்டைக் கேட்க நீ விரும்பினால் கீழே குனிந்து கேள்," என்று அப்பா ஆலோசனை கூறினார்.

வாதிக் பணிவுடன் பூக்களை நோக்கி முழங்காலிட்டுச் சாய்ந்தான். பின்னர் ஒரு பாசாங்குச் சிரிப்புடன் சொன்னான்:

"நாம் அணிலை முற்றாக மறந்து விட்டோம் என்பது பற்றிக் கசகசாப் பூக்கள் எனக்கு ஒரு பாட்டுப் பாடின."



கடகடவென்று சிரித்தார் அப்பா.

''இந்தப் பூக்கள் வியக்கத்தக்கவாறு புலனுணர்ச்சிமிக்கதாகக் காணப்படுகின்றன. சரி, நாம் போய் அணில்களைப் பார்க்கலாம். அவை வெகுதொலைவில் இருக்க முடியாது.''

ஒரு கருங்காரைப் பாதையை வாதிக்கும் அவனது அப்பாவும் குறுக்கே கடந்து சில மீட்டர் தூரம் நடந்ததும் திரும்பவும் பூக்களால் சூழப்பட்டார்கள். இது தாவரத் தோட்டதிற்கே பெருமையாகவும் மிக அழகாகவும் இருக்கும் ரோஜாத் தோட்டம். வசந்த காலம் முதல் இலையுதிர் காலக் கடைசி வரை எண்ணிக்கையற்ற வகை ரோஜாக்கள் பூக்கின்றன. ஒரு வகை 'மாஸ்கோவின் விடியல்' என அழைக்கப்படுகிறது.









இந்த அழகையெல்லாம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த வாதிக் காரிய நோக்குடன் சொன்னான்:

''இங்கே அம்மாவைக் கூட்டிக்கொண்டு வந்திருக்க வேண்டும். இவை அம்மாவிற்குப் பிடித்தமான பூக்கள். உங்களுடைய அடுத்த விடுமுறை நாளில் நாம் எல்லாரும் தாவரத் தோட்டத்துக்கு வருவோமா?''



‘‘கண்டிப்பாக! இந்தப் பயணம் உனக்குப் பிடித்து விட்டது என்பது தெரிகிறது. ஆனால் இப்போது நாம் அணில்களைப் பார்க்கலாம். அவை அங்குதான் இருக்கின் றன. மரங்களின் மீது தீனிக் கூடுகள் தொங்கிக் கொண்டி ருப்பதைப் பார். அவை பற வைகளுக்கும் அணில்களுக் கும் ஆனவை.’’

அவர்கள் சில அடிகள் மட்டுமே நடந்திருப்பார்கள், அப்போது ஓர் அணில் திடீரென்று மரங்களினின்றும் வெளியே தாவி, பின்னங் கால்களில் நின்றபடி பார்வையாளர்களைக் கூர்ந்து நோக்கியது. அதைத் தொடர்ந்து இன்னும் இரண்டு அணில்கள் குதித்துக்கொண்டு வந்தன.

''ஆக, இதோ நீ தேடித் தேடிப் பார்த்த அணில்கள். பயப்படாதே. இவை மிகவும் விநயமான சிறு பிராணிகள். அவை கடிக்காது, உனது கையிலிருந்து தீனியை ஜாக்கிரதையாக எடுத்துக்கொள்ளும். அவற்றுக்குக் கொஞ்சம் கொட்டைகள் கொடு.'' வாதிக்கிடம் கை நிறைய அப்பா கொட்டைகள் கொடுத்தார்.

வாதிக் குத்திட்டு உட்கார்ந்து, தனது கையை நீட்டி உள்ளங் கையைத் திறந்தான்...

பச்சைத் தீவு

## வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது. கடிதங்களைத் தயை செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்: Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR.


## விற்பனையாளர்கள்
## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
## பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

*41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை — 600098*

ஷோ-ரூம்

*136, மவுண்ட் ரோடு, சென்னை — 600002*

கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001*

*87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர் — 641001*

*சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008*

*செர்ரி ரோடு, சேலம் — 636001*

*1ஏ., திருவனந்தபுரம் சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி — 627003*

விற்பனை நிலையம்

*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*

**В. Дацкевич**
ЗЕЛЁНЫЙ ОСТРОВ

*На тамильском языке*

**V. Datskevich**
THE GREEN ISLAND

*In Tamil*

இரண்டாவது (திருந்திய) பதிப்பு, *1988*



© தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னேற்றப் பதிப்பகம், *1980*



சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

*Для дошкольного возраста*



© Издательство „Прогресс“, 1980 г



ISBN 5-05-002027-1



ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

ISBN 5-05-002027-1